Registerd as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 1 [15-06-93] செவ்வாய்க்கிழமை ஓசை 117

## பாவனைக்கு உதவாத இஞ்சி அச்சாறு யாழ். நகர கடையில் விற்பனை

மனிதப் பாவனைக்கு உதவாத இஞ்சி அச்சாறு புட்டிகளில் அடைத்து விற்கப்படுவதை யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் திணைக்களத்தைச் சேர்ந்த உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி த.மகாதேவன் கைப்பற்றியுள்ளார். யாழ். போதனா வைத்தியசாலைக்கு பின்னால் உள்ள மின்சார நிலைய வீதியில் கடையொன்றிலிருந்து இந்தப் புட்டிகள் திடீர்ப் பரிசோதனையின் போது கைப்பற்றப்பட்டன. உணவாகவும், மருந்தாகவும் பாவிக்கப்படும் இஞ்சிக்கு இனிப்பையும், வாசனையையும் ஊட்டுவதற்காகக் கலக்கப்பட்டிருக்கும் திரவம் மனிதப் பாவனைக்கு ஏற்றதல்ல என்றும், அது உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கக் கூடியது என்றும் தெரிவிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர் தமிழீழ காவல் துறையில் ஆஜர் செய்யப்பட்டு, எச்சரிக்கப்பட்டதோடு, 5000ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. இஞ்சிப் புட்டிகளும் (4ஆம் பக்கம் பார்க்க)

# தலைவர் பிரபாகரனுக்கு சிங்களப் பெற்றோர் கடிதம்

## கைதாகியுள்ள பொலிசார் பற்றி அரசிற்கு அக்கறையில்லையாம்

[யாழ்ப்பாணம்]

**விடுதலைப் புலிகள் இயக்கத்தினால், யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு, தற்பொழுது சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் சிங்களப் பொலிசார் குறித்து அரசாங்கத்திற்கு அக்கறை ஏதுமில்லை. தாங்களே கருணை கூர்ந்து மனிதாபிமான ரீதியில், கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். இவ்வாறு தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் கேட்டுக்கொண்டுள்ளனர். இக்கடிதத்தில் காவலிலுள்ள 36 பொலிசாரின் பெற்றோர்கள் கையொபபம் இட்டுள்ளனர்.**

கடந்த மூன்று வருடங்களாக புலிகளின் பாதுகாப்பில் யுத்தக் கைதிகளாக இருக்கும் 38 பொலிசார் மற்றும் ஓர் இராணுவச் சிப்பாயின் பெற்றோர்களில் 36 பெற்றோர்கள் கையெழுத்து இட்டுதலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில்,

எமது பிள்ளைகள் பெற்றோர்களுக்கும் எங்கள் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த சகோதரர் மற்றும் சகோதரிகளுக்கும் உதவும் நோக்கத்துடன் தான் பாதுகாப்பு படையில் சேர்ந்தார்கள். உங்கள் இயக்கத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற திடமான நோக்கத்துடன் அவர்கள் பாதுகாப்புப்படையில் சேரவில்லை. அரசு அவர்களுக்கு வழங்கும் ஒரு சொற்ப சம்பளத்தைக் கொண்டே நாம் வாழ்க்கையை நடத்துகிறோம்.

எமது பிள்ளைகள் 13-06-93 முதல் மேற்கொள்ளவிருக்கும் உண்ணா விரதத்தால் இறந்து போனால் எமது குடும்பங்கள் ஆதரவற்றதாகி விடும். ஏற்கனவே பெற்றோர் சுகவீனமுற்று இருப்பதோடு சகோதரர் மற்றும் சகோதரிகளும்உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிப்படைந்த நிலையில் உள்ளார்கள் என்று அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும், மாங்குளம், மற்றும் ஒட்டிசுட்டான் பொலிஸ்நிலையங்களில் கடமையில் ஈடுபட்டிருந்த எமது பிள்ளைகள் 13-06-1990 இல் விடுதலைப் புலிகளால் சிறைபிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டது முதல் 13-06-1993 உடன் மூன்று வருடங்கள் பூர்த்தியாகின்றன.


எனவே கூட்டாகச் சிறைக் கைதிகளின் பெற்றோர் என்ற முறையில், மனிதாபிமான

## உண்ணாவிரதிகளுக்கு அங்கிலிக்கன் ஆயர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் சிங்கள யுத்தக் கைதிகளுக்கு ஆயர் கென்னத் பெர்னாண்டோ கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். மிகவும் கடினமான இந்த உண்ணாவிரதத்தை இவர்கள் முடிவு செய்தமை குறித்து தாம் மிகவும் கவலையுறுவதாக கென்னத் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அரச அதிகாரிகள், உயர் மட்ட அரசியல் தலைவர்கள் இப்பிரச்சினை குறித்து பேச்சுகள் நடத்தியும் சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை என்றும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இக்கடிதம் விடுதலைப் புலிகளூடாக யுத்த கைதிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.



கிளாலிக் கடற்பரப்பில் மக்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த கடற்புலிகளின் கடற்தாக்குதல் தளபதி லெப். கேணல் புலேந்திரன், லெப். மகான் ஆகியோரின் புகழுடல்களுக்கு அஞ்சலி செலுத்த நீண்ட வரிசையில் நிற்கும் மக்களின் ஒருபகுதியினரையும், விடுதலைப் புலிகள் மலர் வளையத்தை எடுத்துச் செல்வதனையும் படத்தில் காணலாம்.



இட்டுள்ளனர்.

கடந்த மூன்று வருடங்களாக புலிகளின் பாதுகாப்பில் யுத்தக் கைதிகளாக இருக்கும் 38 பொலிசார் மற்றும் ஓர் இராணுவச் சிப்பாயின் பெற்றோர்களில் 36 பெற்றோர்கள் கையெழுத்து இட்டுத்தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில்,

எமது பிள்ளைகள் பெற்றோர்களுக்கும் எங்கள் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த சகோதரர் மற்றும் சகோதரிகளுக்கும் உதவும் நோக்கத்துடன் தான் பாதுகாப்பு படையில் சேர்ந்தார்கள். உங்கள் இயக்கத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற திடமான நோக்கத்துடன் அவர்கள் பாதுகாப்புப்படையில் சேரவில்லை. அரசு அவர்களுக்கு வழங்கும் ஒரு சொற்ப சம்பளத்தைக் கொண்டே நாம் வாழ்க்கையை நடத்துகிறோம்.

எமது பிள்ளைகள் 13-06-93 முதல் மேற்கொள்ளவிருக்கும் உண்ணா விரதத்தால் இறந்து போனால் எமது குடும்பங்கள் ஆதரவற்றதாகி விடும். ஏற்கனவே பெற்றோர் சுகவீனமுற்று இருப்பதோடு சகோதரர் மற்றும் சகோதரிகளும் உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிப்படைந்த நிலையில் உள்ளார்கள் என்று அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும், மாங்குளம், மற்றும் ஒட்டிசுட்டான் பொலிஸ்நிலையங்களில் கடமையில் ஈடுபட்டிருந்த எமது பிள்ளைகள் 13-06-1990 இல் விடுதலைப் புலிகளால் சிறைபிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டது முதல் 13-06-1993 உடன் மூன்று வருடங்கள் பூர்த்தியாகின்றன.

எனவே கூட்டாகச் சிறைக் கைதிகளின் பெற்றோர் என்ற முறையில், மனிதாபிமான முறையில் அவர்களை விடுதலை செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். எமது பிள்ளைகளை விடுதலைசெய்ய உதவுமாறு நாம் பலமுறை சிறிலங்கா அரசைக் கேட்டிருந்தும், ஜனாதிபதி உட்படச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்து எவ்வித பதிலும் தரவில்லை என்றும்,

எங்கள்பிள்ளைகளை இந்தச் சிறைவாசத்திலிருந்து விடுதலை செய்து அவர்களுக்குவாழ்க்கை வாழ்வதற்கான உரிமையை வழங்குமாறு மன்றாட்டமாகக் கேட்டுக்கொள்கிறோம். அவர்களது இரட்சகரும், எங்களது இரட்சகரும் நீங்கள்தான். நீங்கள் அவர்களை விடுதலை செய்தால் நாங்கள் என்றும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உண்ணாவிரதிகளுக்கு அங்கிலிக்கன் ஆயர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் சிங்கள யுத்தக் கைதிகளுக்கு ஆயர் கென்னத் பெர்னாண்டோ கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். மிகவும் கடினமான இந்த உண்ணாவிரதத்தை இவர்கள் முடிவு செய்தமை குறித்து தாம் மிகவும் கவலையுறுவதாக கென்னத் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அரச அதிகாரிகள், உயர் மட்ட அரசியல் தலைவர்கள் இப்பிரச்சினை குறித்து பேச்சுகள் நடத்தியும் சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை என்றும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இக்கடிதம் விடுதலைப் புலிகளூடாக யுத்த கைதிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# அமைச்சர் தொண்டமான் யாழ்ப்பாணம் வர முயற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிராமிய கைத்தொழில் அமைச்சருமான தொண்டமான் யாழ்ப்பாணம் வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

இனப்பிரச்சினை குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவே அமைச்சர் தொண்டமான் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, அமைச்சர் தொண்டமான் யாழ்ப்பாணம் வருவதற்கான அனுமதியை விடுதலைப் புலிகள் வழங்கியுள்ளதாகவும் நம்பகரமாகத் தெரியவருகின்றது. இருப்பினும், தொண்டமான் எப்பொழுது யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என அறியவரவில்லை.

அமைச்சர் தொண்டமான்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ சுற்றிவளைப்பில் 2 தமிழர் சுட்டுக் கொலை

### வட்டவான் பகுதியில் பரிதாபம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வட்டவான் பகுதியை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் இருவரைச் சுட்டுக் கொன்றதுடன் 18க்கு மேலான பொதுமக்களைக் கைது செய்து முகாம் கொண்டுசென்றனர்.

கடந்த ஞாயிறன்று மாலை 3.00 மணியளவில் இப் பகுதியை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் 20க்கு மேற்பட்ட பொதுமக்களை கைது செய்து அதில் இருவரை அந்த இடத்திலேயே சுட்டுக் கொன்றனர். மிகுதிப்பேரை உசன் ஏத்தம் சிறிலங்கா இராணுவ முகாமிற்கு கொண்டு சென்றனர்.

மரியான் விஜயன் (ஒரு பிள்ளைக்கு தந்தை வயது19), கந்தையா ஜீவன் (03 பிள்ளைகளின் தந்தை வயது 38) ஆகியோரே சுட்டுக்கொலைப் பட்டவர்களாவர் இவர்கள் வாழைச்சேனை வட்டவானைச் சேர்ந்தவர்களாவர்.

### மக்கள் பாதுகாப்புப் பணியில்

# மரணித்த மாவீரருக்கு வடமராட்சியில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடலில் மக்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது சிறிலங்கா கடற்படையுடனான போரில் வீரச்சாவு எய்திய கடற்புலிகளின் கடற்தாக்குதல் தளபதி லெப். கேணல் புலேந்திரன், லெப். மகான் ஆகியோரின் புகழுடல்களுக்கு வடமராட்சியில் நேற்று மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

நேற்றுக்காலை இம்மாவீரர்களின் புகழுடல்கள்செம்பியன் பற்றில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. அதையடுத்துப் புகழுடல்கள் வடமராட்சி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை தொடக்கம் இயங்கும்

(முல்லைத்தீவு)

மக்கள் வங்கியின் முல்லைத்தீவுக்கிளை புதுக்குடியிருப்பில் நாளை தொடக்கம் இயங்கவிருப்பதாக மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## ரணில் குழு புறப்பட்டது

(கொழும்பு)

எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் பாரிஸில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள பிரதமர் ரணில் தலைமையிலான குழு நேற்றிரவு பிரான்ஸ் நாட்டிற்கு புறப்பட்டது.

இதே சமயம் உலகவங்கியின் தெற்காசிய பிரிவு தலைவர் தலைமையிலான குழு ஒன்றுஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவை நேற்று சந்தித்தது.



விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் யுத்தக் கைதிகளாக வைக்கப்பட்டுத் தற்போது சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் 38 பொலிசாரில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்.

# எம்மை விடுவிக்க அரசு முயற்சிக்கவில்லை

### பொலிஸ் உண்ணாவிரதிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

"அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னான்டோ எமக்கு அனுப்பிய கடிதம்மூலம் நாம் அறிவது என்னவெனில் எம்மை விடுவிக்க அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பதாகும். அரசால் எம்மை விடுவிக்கமுடியாவிட்டால் எம்மை பார்க்கவரும் பெற்றோருடனாவது இங்கு வருகை தருமாறு அதிவணக்கத்திற்குரிய ஆயர் கெனத் பெர்னான்டோவை தாழ்மையுடன் வேண்டுகிறேன்" இவ்வாறு தற்போது சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதியான பொலிசார் ஒருவர் புலிகளின்குரல் வானொலிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

விடுதலை தொடர்பாக அரசுடன் நடத்திய பேச்சுக்கள் பயனற்றுப் போனதாக ஆயர் கெனத் பெர்னான்டோ யுத்தக் கைதிகளுக்கு அனுப்பிய கடிதம் தொடர்பாக கேட்டபோதே இப்பொலிசார் மேற்கண்டவாறு பதிலளித்தனர். அப்பேட்டியின் விபரம் வருமாறு;

கேள்வி : உங்கள் பெயர், சொந்த இடம், எவ்வாறு கைதானீர்கள்?

பதில் : எனது பெயர் பி. எஸ். பண்டார. சொந்த இடம் கம்பொல. ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத்தில் புலிகளால் சிறைபிடிக்கப்பட்டேன்.

கேள்வி : நீங்கள் சாகும்வரை உண்ணா விரதத்தை ஆரம்பித்து இரண்டு நாளாகிறது. இந்த வேளையில் உங்களை விடுவிக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும்என வலியுறுத்தவிரும்புகின்றீர்கள்?

பதில் : நாங்கள் 13ஆம் திகதி நள்ளிரவு முதல் இந்த சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளோம். இதுவரையும் எம் உண்ணாவிரதம் தொடர்பாக அரசிடம் இருந்து தொடர்பு சாதனங்கள் மூலம் சாதகமான எந்தப் பதிலும கிடைக்கவில்லை. குறைந்தது நாம் இந்த சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதை அரசு அறிந்துள்ளதோ என்பது குறித்து தெரியவில்லை. மனித நேயத்துடன் எம்மை விடுவிக்க மேன்மை தங்கிய ஜனாதிபதியிடமும் அரசிடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம். அரசிடமும் அரச அதிகாரிகள் பாதுகாப்பு அதிகாரிகள் சிங்கள மக்களிடமும் எம்மை இந்த கடைசி நேரத்தில் விடுவிக்க முயற்சி எடுப்பீர்களாயின் அது ஒரு நல்லமுயற்சியாக இருக்கும். எமது விடுதலை தொடர்பாக உதவமுடியும் என நீங்கள் நினைப்பீர்களேயானால் அதை செய்யுங்கள். எதிர்வரும் 18ஆம் திகதி எம் பெற்றோர்கள் வருவதாக அரசு அறிவித்துள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 3-வது நாளாக தொடரும் உண்ணாவிரத போராட்டம்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகளினால் சிறைப்பிடிக்கப்பட்டு யுத்தக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 38 சிறிலங்கா பொலிசாரும் ஓர் இராணுவ சிப்பாயும் ஆரம்பித்துள்ள சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் இன்று மூன்றாவது நாளாக தொடர்கின்றது.

தம்மை விடுவிப்பதற்கான முயற்சியில் ஈடுபடுமாறு அரசினைக் கோரி இவ் உண்ணாவிரதப் போராட்டத்தை இவர்கள் ஆரம்பித்துள்ளமை தெரிந்ததே.

இவர்கள் ஒருவாரத்திற்கு நீர்மட்டும் அருந்தி போராட்டத்தை நடத்தும் அதே வேளை, அரசாங்கம் தமது விடுதலை குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்காதவிடத்து, தாம் இரண்டாவது வாரம்முதல் நீர்கூட அருந்தாது உண்ணாவிரதத்தைத் தொடரப் போவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வயிற்றோட்டம் தீவிரம்

(நெல்லியடி)

கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு நாட்களிலும் வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் ஒன்பது சிறுவர்கள் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. [30]

## ராக்கிங் செய்தமைக்காக பல்கலை மாணவர் நிறுத்தம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலைப்பீட சிரேஷ்ட மாணவர்கள் மூவர் ராக்கிங் செய்த குற்றத்திற்காக விரிவுரைகளிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்துத் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, புதிய மாணவர்கள் மீது ராக்கிங் செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தரும் கலைப்பீடாதிபதியும் மாணவர்களைக் கடுமையாக எச்சரித்துள்ளனர்.

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## மாதன் வேலுப்பிள்ளை

அவர்கள்

(முன்னாள் தலைவர், தெங்கு பனம் பொருள் உ.வி கூ சங்கம் கொடிகாமம்)

(முன்னாள் தலைவர், தென்மராட்சிக் கொத்தணி முன்னாள் செயலாளர், வடமாகாணம் தெ.ப.பொ. கூ. ச. சமாசம்)

மலர்வு : 06-07-1950 உதிர்வு: 15-06-1992

### திதிவெண்பா

ஆண்டு ஆங்கிரசு ஆம் ஆனி ஒன்றதனில்
பூண்ட திதி பூரணையில்---மாண்புமிகு
வேலுப்பிள்ளை சேர்ந்தனரே சிவன் கழலை
ஞாலத்தே இல்வாழ்வு துறந்து.

கூட்டுறவுத் துறை யினிலே கூடி நிதம் சேவை செய்து
நாட்டுயர்வை வளர்ப் பதற்காய் நாடியே நிதம் உழைத்து
ஈட்டுமுயர் வளர்ச்சி தனைக் காணுமிவ் வேளை தனில்
நாடியரன் பாத மலர் சேர்ந்து விட்டார் வேலுப்பிள்ளை.

மின்னிடா இடிவந்து வீழ்ந்தது போல் இருந்ததுவே
மன்னுயர் எம்த லைவர் மாண்ட செய்தி வந்ததுமே
பன்னரிய சேவை தன்னைப் பாரினிலே செய் தெமக்கு
தெங்கு பனம் பொருளின் வளம்காண வழிவகுத் தார்.

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கமதால்
எங்கும் எழில் பூக்குமுயர் வாழ்வதனைத் தந்து தவ
பொங்கு முயர் சேவை செய்து ஈசனடி சேர்ந்த எங்கள்
தங்கம் நிகர் தலைவனுக்கு அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தென்மராட்சி அங்கத்துவ சங்கங்கள்
தென்மராட்சி கொத்தணி. பளை, கொடிகாமம்
சாவகச்சேரி.

12-06-1993 (5137)

## நினைவு கூருகின்றோம் ... 1993-06-15

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 18 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு மட்டு- நிந்தாவூர் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சிகிச்சைக்காகக் கொண்டு செல்லும் போது வீரச்சாவெய்திய -

**கப்டன் பிறின்ஸ்** [ஏகாம்பரம் யோகலிங்கம் - முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை -மட்டு ]

1989ஆம் ஆண்டு கிளிநொச்சி-வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட

**ஜேக்கப்** [திருநாவுக்கரசு ஜெயக்குமார் - வன்னேரிக்குளம் - கிளிநொசசி]

1990ஆம் ஆண்டு திருமலை - மூதூர் - கட்டைபறிச்சான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய -

**ஜெகன்** [ஆப்தீன் முகமட்யூசுப் - குச்சவெளி - திருமலை]

**டங்கா** [மார்க்கண்டு அருமைநாயகம் - கட்டைபறிச்சான் - திருமலை]

மன்னார்-தலைமன்னாரில் பழையபாலம் சிறிலங்கா இராணுவ முகாம்மீது மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**புலோமின்** (அப்பையா தெய்வேந்திரன் - 11-ம் கட்டை, கட்டையடம்பன், முருங்கன் - மன்னார்)

மாங்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரின் உலங்குவானூர்தி தாக்கியதில் வீரச்சாவெய்திய -

**2ம் லெப். கணேசமூர்த்தி** (இராமசாமி சிவபெருமான் - சாளம்பைக்குளம்- வவுனியா]

மாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய -

**டெனி சித்தப்பா** சின்னத்தம்பி விஜயன்-புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை - மட்டு )

**தினேஸ்** (யோகநாதன் பிரபாகரன் - உயிலங்குளம், துணுக்காய்)

**றெஜி** (-வவுனியா)

**அரி** (ஆறுமுகம் மோகனதாஸ் - 122 ஸ்கந்தபுரம், கிளிநொச்சி)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய -

**இராமு** (சந்தனம் சங்கர் - நெளுக்குளம் - வவுனியா)

லகுகலவில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**ராவ்** (முகமது ரபீக் - பொத்துவில் - அம்பாறை)

**டேவிற்** (க. இராஜேந்திரன் - பொத்துவில் - அம்பாறை)

பாணமையில் சிறிலங்கா இராணுவத்தினர் எமது முகாம் ஒன்றின்மீது மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது வீரச்சாவெய்திய

**குபீர்** (-அக்கரைப்பற்று - அம்பாறை)

**அன்வர்** (...............)

வவுனியா காமினி வித்தியாலய முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போதுவீரச்சாவெய்திய

**பர்சான்** (அப்துல்காதர் சம்சுதீன்- காக்கையன்குளம், வவுனியா)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பொத்துவில்-குஞ்சனோடைப் பாலத்தடியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன், மற்றும் முகாமில் வைத்து சிறிலங்கா படையினரால் ரயர்போட்டு எரித்துக் கொல்லப்பட்ட பொத்துவில்-அறுகம்பையைச்சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

திருமலை-மூதூர்ப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு வவுனியா-செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**லெப். தவக்குமார்** (கிருஷ்ணபிள்ளை சிவபாதசுந்தரம்- கொக்குத்தொடுவாய்-மணலாறு)

வவுனியா-பூவரசங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு யாழ்-ஊர்காவற்றுறையில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரின்போதுவீரச்சாவெய்திய-

**2ஆம் லெப். அறிவழகு** (யோசப் வின்சன் - இலந்தை மோட்டை, மன்னார்)

**2ஆம்லெப். செம்பியன் / சுபாஸ்** (பிரான்சிஸ் றொபின்சன் - 10 ஆம் வட்டாரம் புங்குடுதீவு - யாழ்.)

திருமலை - இலங்கைதுறை முகத்துவாரம் நோக்கிச் சென்ற பொதுமக்கள் மீது சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் கொல்லப்பட்ட ஒரு தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6832)

## இராணுவ அதிகாரிகளிடம் தளர்ச்சி காணப்படுகிறதாம்

இராணுவத்தின் உயர் அதிகாரிகள் பலரும் தற்போதைய அரசியல் சூழ்நிலை மாற்றம் காரணமாக குழப்பம் அடைந்திருப்பதாக தெரியவருகிறது.

கூட்டுப்படைத் தலைமை அதிகாரிகளிடையே இதன் தாக்கம் அதிகஅளவில் காணப்படுவதாகவும் தெரிகிறது.

''இன்று நான் இந்தக் கதிரையில் இருக்கிறேன். நாளை எங்கிருப்பேனோ தெரியாது. எனவே என்னிடம் பெமிட் எடுத்தால் உடனடியாக நீங்கள் பொருள்களை ஏற்றிச் சென்றுவிடுவதே நல்லது'' என்று கூட்டுப்படைத் தலைமையகத்தில் இருக்கும் அதிகாரிகளால் வடபகுதிக்கு பொருள்களை எடுத்துச் செல்வதற்கான பாஸ் எடுக்கச் செல்வோருக்கு கூறப்படுகிறதாம்.

# சுவையருவி

சுவையருவி தன் மூன்றாம் அகவு மலரும் இந் நன் நாளில் எமக்கு பல வகையிலும் ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்கிய சகல மக்களிற்கும் மன

மன்னுயர் எய்த லைவர் மாண்ட செய்தி வந்ததுமே
பன்னரிய சேவை தன்னைப் பாரினிலே செய் தெமக்கு
தெங்கு பனம் பொருளின் வளம்காண வழிவகுத் தார்.

தெங்கு பனம் பொருள் கூட்டு றவுச் ங்கமதால்
எங்கு மழில் பூக்குமுயர் வாழ்வதனைத் தந்து தவ
பொங்கு முயர் சேவை செய்து ஈசனடி சேர்ந்த எங்கள்
தங்கம் நிகர் தலைவனுக்கு அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தென்மராட்சி அங்கத்துவ சங்கங்கள்**
தென்மராட்சி கொத்தணி. பனை, கொடிகாமம்
சாவகச்சேரி.

*12-06-1993*

(5137)

---

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய -

**இராமு** (சந்தனம் சங்கர் - நெளுக்குளம் - வவுனியா)

லகுகலவில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**ராவ்** (முகமது ரபீக் - பொத்துவில் - அம்பாறை)

**டேவிற்** (க. இராஜேந்திரன் - பொத்துவில் - அம்பாறை)

பாணமையில் சிறிலங்கா இராணுவத்தினர் எமது முகாம் ஒன்றின்மீது மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது வீரச்சாவெய்திய

திருமலை – இலங்கைதுறை முகத்துவாரம் நோக்கிச் சென்ற பொதுமக்கள் மீது சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் கொல்லப்பட்ட ஒரு தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6832)

---

# சுவையருவி

சுவையருவி தன் மூன்றாம் அகவு மலரும் இந் நன்நாளில் எமக்கு பல வகையிலும் ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்கிய சகல மக்களிற்கும் மனமார்ந்த நன்றி தெரிவிப்பதுடன், தொடர்ந்தும் உங்கள் நல்லாசியையும் ஊக்கமளிப்பையும் நாடி நிற்கின்றோம்.

- ★ **சுவையான சுகாதாரமான உணவு வகைகள், சிற்றுண்டி வகைகள்**
- ★ **சிறந்த ஐஸ்கிறீம் குளிர்பான வகைகள்**
- ★ **சுவைமிகு பாண், கேக் வகைகள்**
- ★ **உங்கள் விசேட வைபவம் சிறியதோ! பெரியதோ!!**

## சிறந்த பரிமாறு சேவை வழங்கும் முன்னணி ஸ்தாபனம்
## உங்கள் தேவை எதுவானாலும் இன்றே நாடுங்கள்

# சுவையருவி

## 5, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6833)

குறிப்பு: சைவ உணவு வகைகள் பிரத்தியேக சமையலறையில் அசைவமுடன் எவ்வித தொடர்புமின்றி தயாரிக்கப்படுகின்றன.

சிந்தனைக்கு

தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை. எதிரிக்குச் சகுனம் பிழையாக இருந்தாற்போதும் என்று எண்ணுவாரைப் போல. - தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## யுத்தமும் விலைவாசி ஏற்றமும்

மண்ணெய், டீசல், கோதுமை மா ஆகியவற்றின் விலைகளையும், மின்சாரக் கட்டணத்தையும் சிறிலங்கா அரசாங்கம் உயர்த்தியுள்ளது. வரவு - செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையை ஈடுகட்டுவதன் பொருட்டும், உதவி வழங்கும் நாடுகளினதும், நிறுவனங்களினதும் அதிகரித்த நிதி உதவியைப்பெறும் பொருட்டே இவ் அதிகரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ் அதிகரிப்புக்கள் யாவும் சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்து மேற்கொண்ட வற்புறுத்தலினால் செய்யப்பட்டவையாகும். இந்நிலையில், இலங்கை மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் விடயங்களை உதவி வழங்கும் நாடுகள்/நிறுவனங்கள் எந்தளவிற்குக் கட்டுப்படுத்தும் ஆற்றல்கொண்டுள்ளன என்பதைப் புரிந்துகொள்ளலாம். இந்நிலையானது 1977 ஆம் ஆண்டு சிறிலங்கா அரசாங்கம் கடைப்பிடிக்கத் தொடங்கிய திறந்த பொருளாதாரக் கொள்கையும், கடந்த பதினைந்து வருட காலமாகச் சிங்கள அரசாங்கம் கடைப்பிடித்துவரும் இராணுவ விரிவாக்கக் கொள்கையினதும் விளைவுமாகும்.

காரணங்கள் எதுவாக இருப்பினும், ஐ.தே. கட்சி அரசாங்கம் மக்களின் அன்றாட வாழ்க்கையை நேரடியாகப் பாதிக்கும் விடயத்தில் கைவைக்கும் அளவிற்குப் பொருளாதார நெருக்கடியில் சிக்கிப்போயுள்ளது.

இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளும் ஐ. தே கட்சிக்குத் தெரியும். இருப்பினும், அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரிப்பதில் அரசாங்கம் தயக்கம் காட்டவில்லை மேலும், பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவுத்திட்டம், இலவசப் பாடப் புத்தகத்திட்டம், இலவச சீருடைத்திட்டம் என்பனவற்றையும் நிறுத்துவதற்கு ஆலோசித்து வருகின்றது.

அதாவது, மக்களின் அன்றாடத் தேவைகளுடன் மிக நெருக்கமான உணவு, எரிபொருள், எதிர்காலச் சந்ததியின் விருத்திக்குத் தேவையான கல்வி என்பனவற்றில் அரசாங்கம் கை வைக்கத் துணிந்துள்ளது. ஆனால், இப்பிரச்சினைக்கு முக்கிய காரணமாகவுள்ள இராணுவச் செலவீட்டில்

### கண்ணிவெடியில் சிக்கும்

# வாகனத்தின் கீழ் பாகத்தில் பெரும் சேதம் நிச்சயமல்ல

**- அரசாங்க சிரேஷ்ட பகுப்பாய்வாளர் சாட்சியம்**

(கொழும்பு)

நிலத்தில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடி ஒன்று வெடிக்கும்போது அதன் மேலால் சென்று கொண்டிருக்கும் வாகனத்தின் கீழ்ப் பகுதியைப் பெரியளவில் சேதமாக்கும் என்று நிச்சயமாகக் கூற முடியாது. ஏனென்றால் இது வெடி கருவி புதைக்கப்பட்ட இடத்திற்கும், வாகனத்திற்கும் இடையேயுள்ள இடைவெளியையும், வெடிகருவியின் தாக்கத்தையும் பொறுத்த விடயம் ஆகும்.

இவ்வாறு சர்வதேச ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்த அரசாங்க சிரேஷ்ட உதவிப் பகுப்பாய்வாளர் காமினி குணதிலக்க தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் காமன்வெல்த் நாடுகளின் மூன்று நீதிபதிகளைக் கொண்ட விசாரணை ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்த குணதிலக்கவைக் காலஞ் சென்ற ஜெனரல் கொப்பேகடுவவின் நலன்களைக் கவனிக்கும் சட்டத்தரணி ரஞ்சித் அபய சேகரா குறுக்கு விசாரணை செய்தார்.

கேள்வி: 19 - 08 - 92 இல் நீங்கள் தாக்குதலுக்கு உள்ளான வாகனத்தைக் கண்டதாகக் கூறினீர்கள். தலை கீழாகத் தூக்கி எறியப்பட்ட நிலையில் அதனைக் கண்டீர்களா?

பதில்: இல்லை.

கேள்வி: வாகனம் எந்தப் பக்கத்தில் தாக்கப்பட்டிருந்தது?

பதில்: வலது பின் பக்கத்தில்.

கேள்வி: வெடிகுண்டு நிலத்தில் புதைக்கப்பட்டிருந்து வெடிக்க வைக்கப்பட்டிருந்தால் அது வாகனத்தின் கீழ்ப்பகுதியை மோசமாகப் பாதித்து இருக்காதா?

பதில்: கட்டாயமாக அவ்வாறு இருக்க வேண்டும் என்பதில்லை. அது வாகனத்திற்கும் வெடிக்கும் கருவிக்கும் இடையேயுள்ள இடைவெளியையும், வெடிகருவியின் தாக்கத்தையும் பொறுத்ததாகும்.

கேள்வி: நீங்கள் வாகனத்தைப் பார்வையிட்டபோது அதன் புகைப்போக்கி

பதில்: குறிப்பெதனையும் எடுக்கவில்லை. ஆனால் சில துவாரங்களை நான் அவதானித்தேன்.

கேள்வி: உங்களுக்கு ஒரு குண்டுவெடிப்பால் இந்த ஜீப்பில் வந்த ஒருவரை தவிர ஏனையோர் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டது. இதற்கான சாட்சியங்களை நீங்கள் சேகரித்திருக்கிறீர்களா?

பதில்: ஆம், ஒரு ஒழுங்கு முறையிலேயே நான் இதனை மேற்கொண்டேன்.

கேள்வி: நீங்கள் ஒருபரலை மட்டுமே பார்த்துள்ளீர்கள். இதற்கு இரண்டு பரல்கள் உள்ளது உங்களுக்குத் தெரியாதா?

பதில்: இல்லை.

கேள்வி: வாகனம் தலை கீழாக இருக்கும் படமொன்றை நீங்கள் பார்க்கவில்லையா? அதில் இரு பரல்கள் உள்ளன.

பதில்: இல்லை நான் அப்படத்தை இப்போது தான் பார்க்கிறேன்.

கேள்வி: இப்படத்தில் இரு பரல்களைத் காணக்கூடியதாகவுள்ளது இல்லையா?

பதில்: ஆம்.

கேள்வி: பிரிட்டன் நிபுணர் ஜே. ஆர். வைட் இக் குண்டு வெடிப்பு பற்றிய தனது அறிக்கையில் நிலத்தில் குண்டு வெடிப்பு நடந்திருந்தால் கீழ்ப் பகுதிகளில் சேதம் ஏற்படாதது ஒரு குறிப்பிடத்தக்க விடயம் எனக் கூறியுள்ளார்.

பதில்: ஆம், ஆனால் அது வெடிமருந்தின் தன்மையிலும் அவற்றின் இடஅமைப்பிலும் தங்கியுள்ளது.

கேள்வி: இவற்றை நீங்கள் விரிவாக ஆராய்ந்தீர்களா?

பதில்: நான் சேதமடைந்திருந்த பகுதியை மட்டுமே ஆராய்ந்தேன்.

கேள்வி: இதனை ஆராய்வதற்கு இதில் காயமடைந்தவர்களையும், அவர்களது காயங்கள் எப்படியானவை என்பதையும் நீங்கள் பரிசீலனை செய்திருக்கவேண்டும். அவ்வாறு செய்தீர்களா?

பதில்: எனக்கு அதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

கேள்வி: குண்டு வெடிப்பில் ஏற்பட்ட குழி பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்

காட்சியும் தெரிவித்தது. இதே தினம் மொறட்டுவாவில் நடைபெற்ற பொதுக்கூட்ட மொன்றிலும் பிரேமதாசா இதனைக் கூறியிருந்தார். இதனை நீங்கள் அறிந்திருந்தீர்களா?

பதில்: ஆம். நான் கேள்விப் பட்டேன்.

கேள்வி: எப்போது இவ் விடயத்தில் உதவும்படி உங்கள் திணைக்களத்திற்கு கோரிக்கை விடப்பட்டது?

பதில்: 17-08-1992 திகதிய கடிதம் மூலம் கோரப்பட்டது.

## உலக குப்பைகளை நாம் வாங்குகிறோம்

**சு.க. உறுப்பினர் குற்றச்சாட்டு**

[கொழும்பு]

உலகத்திலுள்ள குப்பைகளை எல்லாம் விலை கொடுத்து வாங்கி நாம் அவற்றை இங்கு புதைத்துக் கொண்டிருக்கிறோம் என்று சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கிங்ஸ்லி விக்கிரமரத்னா பாராளுமன்றத்தில் பேசும்போது குறிப்பிட்டார்

இறக்குமதிகள் ஏற்றுமதிகள் கட்டுப்பாடு திருத்த சட்டமூலத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்,

பழைய செய்தித்தாள் இறக்குமதியால் புதிய தொழில் வாய்ப்பு ஏற்படுகிறதா? அல்லது புதிய தொழில் முயற்சிகள் ஆரம்பமாகின்றதா? இல்லை பின் ஏன் பழைய செய்தித்தாளை இறக்குமதி செய்கிறீர்கள். பழைய கார், மோட்டார் சைக்கிள், பஸ்கள் இறக்குமதியாகிறது இதனால் எதுவித நன்மையும் இல்லை. மிக விரைவில் மீதமடைந்த பழைய உணவையும் இறக்குமதி செய்வீர்கள் என்றும் தெரிவித்தார்.

## ஊழலை விசாரிக்க விசேட குழு

(கொழும்பு)

கலாசாரம், தகவல்துறை அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் ஊழல் விரயம் ஆகியவற்றை நீக்கவும் இது குறித்து விசாரிக்கவும் அமைச்சர் லொக்குபண்டார விசேட குழுவொன்றை நியமித்துள்ளார்.

# விமலரெட்னா உயிராபத்து குறித்து முன்பே கூறினார்

**- ஆணைக்குழு முன் சகோதரர் சாட்சியம்**

(கொழும்பு)

பிரிகேடியர் விஜய விமலரத்னா தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும், இராணுவத்துக்குள்ளேயே தனக்கு பயமுறுத்தல் இருப்பதாகவும், தன்னையும், மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவையும் அதிகாரிகள் பலர் விரும்பவில்லை என்றும் எம்மிடம் தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறு சர்வதேச விசாரணை ஆணைக்குழுமுன்பாக சாட்சியமளித்த விஜய விமலரத்னாவின் சகோதரர் மென்டிஸ் விமலரத்னா தெரிவித்தார்,

தெஹிவளையில் இருக்கும் ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் உரிமையாளரான அவர் மேலும் கூறுகையில்:

17 08-92-ல் நான் அராலித் துறைக்குச் சென்றேன். குண்டுவெடித்த இடத்தைப் பார்வையிட்டேன். அதனால் ஏற்பட்ட குழியையும் புகைப்படம் எடுத்தேன். நான் அங்கு சுமார் 45 நிமிடங்கள்வரை நின்றேன். அங்கிருந்து என்னால் கண்டெடுக்கப்பட்ட லாண்ட் றோவரின் துண்டு ஒன்றையும் கொண்டுவந்துள்ளேன்.

விமானம் மூலம் பலாலி சென்றேன். அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் வேலணை சென்று அங்கிருந்து அராலித் துறைக்குச் சென்றேன்.

நிமிடம்வரை இருந்தோம். அதற்குள் பார்க்கக்கூடியதாக குண்டுவெடிப்புத் துண்டுகள் எதுவும் இருக்கவில்லை. குழிக்குள் நாம் இறங்கியதை எவரும் தடுக்கவில்லை. நாம் அங்கு சென்றபோது வேறு சில இராணுவ அதிகாரிகளும் இருந்தனர். ஆனால் குழி இருந்த பகுதியில் பாதுகாப்புப் போடப்பட்டிருந்ததா என்பது எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடன் எமது குடும்பத்தவர்கள் எட்டுப்பேர் வந்திருந்தனர்.

நான் ஆகஸ்ட் 5-ம் திகதியே எனது சகோதரரைக் கடவத்தையில் வைத்து எனது மற்றுமொரு சகோதரனின் வீட்டில் கடைசியாகச் சந்தித்தேன். அங்குதான் எமது தந்தையும் வசிக்கிறார். அவர் தனது உயிருக்கு ஆபத்துள்ளதாகக் குறிப்பிட்டார். இராணுவத்துக்குள்ளேயே தனக்குஆபத்து உள்ளதாகக் கூறினார். அதிகாரிகள் சிலர் தன்னையும், கொப்பேகடுவவையும் விரும்பவில்லை என்றும் தெரிவித்தார். கொப்பேகடுவவுடன் எனது சகோதரர் மிகவும் நெருங்கிய நட்புறவுடன் இருந்தார் என்றும் தெரிவித்தார்.

இதனையடுத்து சண்டே ஒப்சேவர் பத்திரிகையின் உதவி ஆசிரியர் கீர்த்தி கெலிகம கூறியதாவது;

எமது ஆசிரியர் மகிந்தபால தீவிர அரசாங்க ஆதரவுப் பாதையில் சென்றார். எதிர்க்கட்சிகளை அவர்கடுமையாகத் தாக்கினார். நான் அரசஆதரவான பாதையில் செல்லவில்லை. இதனால் என்மீது அவரும், நிர்வாகத்தினரும் ஆத்திரமடைந்து இருந்தனர். இவ்வாறு சென்றால் எனது உயிருக்கு ஆபத்து நேரிடலாம் என்று எச்சரிக்கை செய்யப்பட்டேன். ஜெனரல் கொப்பேகடுவவும் முடிக்கப்படுவார் என்று எனக்குக் கூறப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் கொப்பேகடுவவிற்கு எதிர்பாராதவிதமாக என்ன நடந்தது என்பது தெரியும் தானே எனக் கூறப்பட்டிருந்தது.

## பாடத்திட்டத்தில் புதுஅம்சம் கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

1994 முதல் இக்கற்கைநெறி

யும், கடந்த பதினைந்து வருட காலமாகச் சிங்கள அரசாங்கம் கடைப்பிடித்துவரும் இராணுவ விரிவாக்கக் கொள்கையினதும் விளைவுமாகும்.

காரணங்கள் எதுவாக இருப்பினும், ஐ.தே. கட்சி அரசாங்கம் மக்களின் அன்றாட வாழ்க்கையை நேரடியாகப் பாதிக்கும் விடயத்தில் கை வைக்கும் அளவிற்குப் பொருளாதார நெருக்கடியில் சிக்கிப்போயுள்ளது.

இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளும் ஐ.தே கட்சிக்குத் தெரியும். இருப்பினும், அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரிப்பதில் அரசாங்கம் தயக்கம் காட்டவில்லை மேலும், பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவுத்திட்டம், இலவசப் பாடப் புத்தகத்திட்டம், இலவச சீருடைத்திட்டம் என்பனவற்றையும் நிறுத்துவதற்கு ஆலோசித்து வருகின்றது.

அதாவது, மக்களின் அன்றாடத் தேவைகளுடன் மிக நெருக்கமான உணவு, எரிபொருள், எதிர்காலச் சந்ததியின் விருத்திக்குத் தேவையான கல்வி என்பனவற்றில் அரசாங்கம் கை வைக்கத் துணிந்துள்ளது. ஆனால், இப்பிரச்சினைக்கு முக்கிய காரணமாகவுள்ள இராணுவச் செலவீட்டில் மட்டும் கை வைக்க அரசு விரும்பவில்லை. மாறாக அதிகரிக்கும் நோக்கமே கொண்டதாகவுள்ளது.

உண்மையில், இராணுவச் செலவீட்டுடன் ஒப்பிடுகையில் உணவு, எரிபொருள், மாணவர்களுக்கான இலவச விநியோகங்கள் என்பனவற்றிற்கு அரசாங்கம் குறைந்தளவு நிதி ஒதுக்கீட்டையே செய்கின்றது. எடுத்துக்காட்டாக இராணுவச் செலவீட்டிற்கென 2,000 கோடி ரூபாவிற்கும் 2 500 கோடி ரூபாவிற்கும் இடையில் ஒதுக்கீடு செய்யும் அரசாங்கம், கல்விக்கென 800 கோடி ரூபாவையே ஒதுக்கீடு செய்கின்றது. இது இராணுவச் செலவீட்டில் மூன்றில் ஒரு பகுதியாகும். அதாவது தேசிய வருமானத்தில் இராணுவச் செலவீட்டிற்கு ஏழு வீதத்திற்கு மேல் செலவுசெய்யும் அரசாங்கம், கல்விக்கு மூன்று வீதத்திற்கும் குறைவாகவே ஒதுக்குகின்றது.

ஆனால், பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு உலக நிதி நிறுவனங்களின் நெருக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையில், அரசாங்கம், தனக்குத் தேவையான வருமானத்தைப் பெறுவதற்கு மக்களை நேரடியாகப் பாதிக்கும் அத்தியாவசியப் பொருள்கள், எரிபொருள் என்பவற்றின் மீதான வரியையே அதிகரித்துள்ளது. மாறாக இலங்கை மக்களைக் கடந்த பத்தாண்டு காலத்தில் பெரும் கடனாளியாக்கிய/ ஆக்கிக்கொண்டிருக்கின்ற இராணுவச் செலவீட்டைக் குறைக்க அரசாங்கம் முற்படவில்லை.

அரசாங்கத்தின் இம்முடிவானது, மக்களை எக்கேடு கெட்டால் என்ன? எமது ஆட்சி அதிகாரம் கைமாறினால் என்ன? சிங்களப் பேரினவாதக் கொள்கையைக் கைவிடத்தயாராக இல்லை என்பதையே காட்டுவதாகவுள்ளது. இந்நிலையானது, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கோ, அன்றி இராணுவச் செலவீட்டைக் குறைக்கவோ அரசாங்கம் தயாராக இல்லை என்பதையே காட்டுவதாகும்.

ஆனால், இது ஒருபோதும் சிறிலங்காவைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சிபெற உதவப் போவதில்லை தற்பொழுதே போருக்காக மாதாந்தம் ஒருவர் 1877 ரூபாவைச் செலவிடும் இலங்கை மக்களின் தலையில் மேலும் பளுவை ஏற்றுவதாகவே அமையும். அத்தோடு, சிறிலங்காவின் இறைமையை முழுமையாக உதவி வழங்கும் வெளிநாடுகள்/நிறுவனங்கள் என்பவற்றிடம் ஒப்படைப்பதாகவே முடியும். இந்நிலை தொடருமானால் முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும், பிரேமதாசாவும் கனவுகண்ட 'சிங்கப்பூர்' ஒன்று சிறிலங்காவில் உருவாகாது. மாறாக, பஞ்சத்தாலும், பட்டினியாலும் வாடும் சோமாலியா ஒன்றே உருவாக முடியும்.

---

டதாகக் கூறினீர்கள். தலை கீழாகத் தூக்கி எறியப்பட்ட நிலையில் அதனைக் கண்டீர்களா?

பதில்: இல்லை.

கேள்வி: வாகனம் எந்தப் பக்கத்தில் தாக்கப்பட்டிருந்தது?

பதில்: வலது பின் பக்கத்தில்.

கேள்வி: வெடிகுண்டு நிலத்தில் புதைக்கப்பட்டிருந்து வெடிக்க வைக்கப்பட்டிருந்தால் அது வாகனத்தின் கீழ்ப்பகுதியை மோசமாகப் பாதித்து இருக்காதா?

பதில்: கட்டாயமாக அவ்வாறு இருக்க வேண்டும் என்பதில்லை. அது வாகனத்திற்கும் வெடிக்கும் கருவிக்கும் இடையேயுள்ள இடைவெளியையும், வெடிகருவியின் தாக்கத்தையும் பொறுத்ததாகும்.

கேள்வி: நீங்கள் வாகனத்தைப் பார்வையிட்டபோது அதன் புகைப்போக்கிகளைக் கண்டீர்களா?

பதில்: ஆம்.

கேள்வி: இவற்றை மிகக் கவனமாகப் பரிசீலித்தீர்களா?

பதில்: பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்த்தேன். ஆனால் கீழே உள்ள பகுதிகளைப் பார்க்கவில்லை.

கேள்வி: கீழே உள்ள பரல் சேதம் அடைந்திருந்ததா?

பதில்: பெரிய அளவிலான சேதம் எதுவும் இல்லை; சிறிய சேதங்களே அவற்றில் காணப்பட்டன.

கேள்வி; சேதங்களைப் படத்தில் காட்ட முடியுமா?

பதில்: இந்தப் படத்தில் சேதம் எதனையும் காட்ட முடியாது.

கேள்வி: சேதம் எதையாவது நீங்கள் குறிப்பிட்டீர்களா?

தால் கீழ்ப் பகுதிகளில் சேதம் ஏற்படாதது ஒரு குறிப்பிடத்தக்க விடயம் எனக் கூறியுள்ளார்.

பதில்: ஆம், ஆனால் அது வெடிமருந்தின் தன்மையிலும் அவற்றின் இட அமைப்பிலும் தங்கியுள்ளது.

கேள்வி: இவற்றை நீங்கள் விரிவாக ஆராய்ந்தீர்களா?

பதில்: நான் சேதமடைந்திருந்த பகுதியை மட்டுமே ஆராய்ந்தேன்.

கேள்வி: இதனை ஆராய்வதற்கு இதில் காயமடைந்தவர்களையும், அவர்களது காயங்கள் எப்படியானவை என்பதையும் நீங்கள் பரிசீலனை செய்திருக்கவேண்டும். அவ்வாறு செய்தீர்களா?

பதில்: எனக்கு அதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

கேள்வி: குண்டு வெடிப்பில் ஏற்பட்டகுழி பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டிருந்தது எனநீங்கள் முன்னர் கூறியிருந்தீர்கள்?

பதில்: ஆம்.

கேள்வி: இதற்குள் யாராவது இறங்கி துண்டுகள் எதையும்எடுத்து வைத்திருக்க முடியாதா?

பதில்: அப்படிநான் நினைக்கவில்லை.

கேள்வி: நீங்கள் இந்த இடத்திற்கு 19 ஆகஸ்டில் செல்ல முன்பாக, இது தொடர்பாக டெய்லி நியூஸ் பத்திரிகையில் 10-8-92இல் வந்த செய்தியை படித்தீர்களா?

பதில்: ஆம்.

கேள்வி: இது ஒரு பழைய கண்ணி வெடியால் அதிக பாரம் காரணமாக ஏற்பட்டது எனவும், அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது இதுதான் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தி. இதனையே அரச வானொலி, தொலைக்

இவ்வாறு சர்வதேச விசாரணை ஆணைக்குழுமுன்பாக சாட்சியமளித்த விஜய விமலரத்னாவின் சகோதரர் மென்டிஸ் விமலரத்னா தெரிவித்தார்,

தெஹிவளையில் இருக்கும் ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் உரிமையாளரான அவர் மேலும் கூறுகையில்:

17 08-92-ல் நான் அராலித் துறைக்குச் சென்றேன். குண்டுவெடித்த இடத்தைப் பார்வையிட்டேன். அதனால் ஏற்பட்ட குழியையும் புகைப்படம் எடுத்தேன். நான் அங்கு சுமார் 45 நிமிடங்கள்வரை நின்றேன். அங்கிருந்து என்னால் கண்டெடுக்கப்பட்ட லாண்ட் றோவரின் துண்டு ஒன்றையும் கொண்டுவந்துள்ளேன்.

விமானம் மூலம் பலாலி சென்றேன். அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் வேலணை சென்று அங்கிருந்து அராலித் துறைக்குச் சென்றேன். கேணல் லோறன்ஸும் என்னுடன் வந்திருந்தார். குண்டு வெடிப்பால் ஏற்பட்ட குழிக்குள் இறங்கிப் பார்த்தோம். அக்குழியினுள் சுமார் எட்டு

புப் போடப்பட்டிருந்தது என்பது எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடன் எமது குடும்பத்தவர்கள் எட்டுப்பேர் வந்திருந்தனர்.

நான் ஆகஸ்ட் 5-ம் திகதியே எனது சகோதரரைக் கடவத்தையில் வைத்து எனது மற்றுமொரு சகோதரனின் வீட்டில் கடைசியாகச் சந்தித்தேன். அங்குதான் எமது தந்தையும் வசிக்கிறார். அவர் தனது உயிருக்கு ஆபத்துள்ளதாகக் குறிப்பிட்டார். இராணுவத்துக்குள்ளேயே தனக்குஆபத்து உள்ளதாகக் கூறினார். அதிகாரிகள் சிலர் தன்னையும், கொப்பேகடுவவையும் விரும்பவில்லை என்றும் தெரிவித்தார். கொப்பேகடுவவுடன்

[illegible] அரசாங்க ஆதரவுப் பாதையில் சென்றார். எதிர்க்கட்சிகளை அவர்கடுமையாகத் தாக்கினார். நான் அரசஆதரவான பாதையில் செல்லவில்லை. இதனால் என்மீது அவரும், நிர்வாகத்தினரும் ஆத்திரமடைந்து இருந்தனர். இவ்வாறு சென்றால் எனது உயிருக்கு ஆபத்து நேரிடலாம் என்று எச்சரிக்கை செய்யப்பட்டேன். ஜெனரல் கொப்பேகடுவவும் முடிக்கப்படுவார் என்று எனக்குக் கூறப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் கொப்பேகடுவவிற்கு எதிர்பாராதவிதமாக என்ன நடந்தது என்பது தெரியும் தானே எனக் கூறப்பட்டிருந்தது.

---

## பாடத்திட்டத்தில் புதுஅம்சம் கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

பாடசாலைப்பாடத்திட்டத்தில் கிராமிய நாடகங்கள், கவிதை, கிராமியப் பாடல்களைச் சேர்க்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

1994 முதல் இக்கற்கைநெறி பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் எனக் கல்வி அமைச்சு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

---

## 'கை'சின்ன விட்டுக்கொடுப்பு முட்டாள்தனமானது

– அநுரா பண்டாரநாயக்க

[கொழும்பு]

முன்னணியின் நோக்கங்களை நியாயப்படுத்தியவர்களுக்காக கை சின்னத்தை நாம் தியாகம் செய்தது முட்டாள் தனமானது என்று சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரான அநுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் மற்றும் உட்கட்சி விவகாரங்கள் தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறுகையில்; பரம்பரை பரம்பரையாக சுதந்திரக் கட்சிக்கு வாக்களித்த கிராமப்புற மக்கள் இப்போது அதனை நிராகரித்துள்ளனர்.

பொதுமக்களைத் திருப்திப் படுத்தக்கூடிய பொருளாதாரத் திட்டத்துடன் சிறந்தசக்தி வாய்ந்த மாற்றுக் கட்சியாக இல்லாத வரையில் அடுத்த தேர்தலிலும் நாம் வெற்றி பெற முடியாது.

திருமதி சந்திரிகா கூறுவது போல் அவர் ஒரு சிறந்த அமைப்பாளராக இருந்திருப்பாரேயானால் சிறிலங்கா மக்கள் கட்சி, ஐக்கிய சோசலிச முன்னணி, பி.என்.பி. ஆகிய அவர் முன்பு அங்கம் வகித்த கட்சிகளைப் பலப்படுத்தியிருப்பார். ஆனால் அவர்செய்ததுஎன்ன? சுதந்திரக் கட்சிக்குள் பின் கதவால் ஊர்ந்து வந்துள்ளார். எனினும் திருமதி சந்திரிகாவின் வெற்றிக்காக அவர்மீது நான் எரிச்சலடையவில்லை. பண்டாரநாயக்க என்னும் பெயர் வாக்குகளைக் கவர்ந்திழுக்கக்கூடியதாக இருப்பதையிட்டு உண்மையாகவே மகிழ்ச்சி அடைகிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

---

# ஜெர்மனியர் என்று கூற வெட்கப்படவேண்டியுள்ளது

## ஜெர்மன் அதிபர் கோல் தெரிவிப்பு

(சேபியா)

துருக்கிய பெண்களையும், சிறுவர்களையும் புதியநாசிகள் கொலைசெய்ததையிட்டு நான் ஜெர்மனியர் என்று கூற வெட்கப்படுகிறேன். இவ்வாறு ஜெர்மன் அதிபர் ஹெமற் கோல் தெரிவித்தார்.

பல்கேரியாவுக்கு அரச முறைப் பயணமொன்றை மேற்கொண்டிருக்கும் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

அதேவேளை வெளிநாட்டவர்மீதுதாக்குதல் மேற்கொள்வதைக் கண்டித்து, நேற்று முன்தினம் ஜெர்மனி முழுவதும் ஆயிரக்கணக்கான துருக்கியர் தமது கடைகளை அடைத்தனர். தலைநகர் பேர்லினிலும் நூற்றுக்கணக்கான ஜெர்மனியர்களும் தமது கடைகளையும். காரியாலயங்களையும் பூட்டி துருக்கியருக்கு ஆதரவு தெரிவித்தனர்.

பஸ்ரெட் என்ற இடத்தில் சில தினங்களுக்கு முன்பாகவும் வெளிநாட்டு அகதிகள் முகாம் ஒன்றின் மீது புதிய நாசிகள் குண்டு வீசித் தாக்குதல் நடாத்தியுள்ளனர். எனினும் இச் சம்பவத்தில் முகாமில் தங்கியிருப்பவர் எவரும் காயப்படவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

---

## நடுத்தரவீச்சு ஏவுகணை; இந்தியா மீண்டும் சோதனை

(டில்லி)

இந்தியா அதன் நடுத்தர ஏவுகணைப் பரிசோதனையை மீண்டும் வெற்றிகரமாகச் செய்துள்ளது. பிரித்வி வரிசையில் பரிசோதிக்கப்பட்ட இந்த ஏவுகணைப் பரிசோதனை வங்காள விரிகுடாவில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்த ஏவுகணை முந்நூற்றைம்பது மைல் தொலைவில் இருக்கக்கூடிய இலக்குகளைத் தாக்கும் வல்லமை கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஏவுகணை எடுத்துச் செல்லக்கூடிய ஆயுதம் மற்றும் வெடிபொருள் சம்பந்தமான பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இறுதி மதிப்பீட்டிற்காக இது விரைவில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

---

## ஆர். எஸ். எஸ். பொலிசார் மோதல்

(டில்லி)

கேரளாவில் நேற்று முன்தினம் ஆர். எஸ். எஸ் தொண்டர்களுக்கும், பொலிசாருக்குமிடையே இடம்பெற்ற மோதல்களில் 32 பொலிசாரும், 42 ஆர். எஸ். எஸ் தொண்டர்களும் காயமுற்றனர். தடை உத்தரவுகளை மீறி ஊர்வலமாகச் செல்ல முற்பட்ட ஆர். எஸ். எஸ் தொண்டர்களுக்கும், பொலிசாருக்கும் இடையிலேயே மோதல்கள் நடைபெற்றன. கல்வீச்சுச் சம்பவங்களும், தடியடிப் பிரயோகமும் இதில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

ஈழநாதம்

# விவசாயிகள் மீது சூடு அ.தி.மு.க. எம்.எல்.ஏ. கைது

(சென்னை)

ஆர்ப்பாட்டம் செய்த விவசாயிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த அ. இ. அ.தி.மு.க சட்ட மன்ற உறுப்பினர் என். ஆர். சிவபதி நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

திருச்சி மாவட்டம் காட்டுப் புத்தூர் கிராமத்தைச் சேர்ந்த சுமார் நானூறு விவசாயிகள் நேற்றுமுன்தினம் திரு. சிவபதியின் இல்லத்திற்கு ஊர்வலமாகச் சென்று தமது கிராமத்திற்கு வரும் வாய்க்கால் தண்ணீரை அருகிலிருக்கும் மோசனூரைச் சேர்ந்த விவசாயிகள் தடுப்பதாக முறையிட்டனர்.

தாம் திருமண ஏற்பாடுகளில் மூழ்கி இருப்பதால் அது முடிந்தபின்னர் இவ் விடயத்தைக் கவனிப்பதாக உறுப்பினர் சிவபதி கூறியதை ஏற்காமல் விவசாயிகள் உடனடிக் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தினர்.

இந்நிலையில் ஆத்திரமுற்ற சிவபதி விவசாயிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யவே ஐந்து விவசாயிகள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் பற்றி கொடைக்கானலில் இருக்கும் முதல்வர் ஜெயலலிதாவிற்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து அவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வழக்கை குற்றப் புலனாய்வு பிரிவுக்கு மாற்றும்படி உத்தரவு பிறப்பித்த முதல்வர் ஜெயலலிதா சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர் மீதும் உடன் நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக் கொண்டார்.

## கனடா, துருக்கிக்கு பெண் பிரதமர்கள் தெரிவு

(லண்டன்)

கனடா. துருக்கி ஆகிய இரு நாடுகளிலும் முதற்கடவையாக பெண்கள் பிரதமர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கனடாவின் முதல் பெண் பிரதமராக கிம்காம்பல் (வயது46) தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் பிரதமர் மல்ரோனியின் அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சராக இருப்பவர். பிரதமர் மல்ரோனி தனது ஒன்பது வருட பிரதமர் பதவியை விட்டு விலகுவதாக கடந்த பெப்ரவரியில் அறிவித்தார். இதையடுத்து ஆளும் கட்சியின் தேர்தலில் காம்பல் புதிய பிரதமர் பதவிக்கு தெரிவானார்.

இதேவேளை முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட துருக்கியின் முதல் பெண் பிரதமராக டெமிலர் தெரிவாகியுள்ளார்

## வீரவணக்க கூட்டம்

6 ஆம் மாதங்களில் (ஜூன் மாதம்) வீரச்சாவடைந்த வலிகாமம் கோட்டத்தின். நல்லூர் வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம இன்று இரவு 8 00 மணிக்கு, திருநெல்வேலி சிவன் கோவில் அருகாமையில் நடைபெறும்.

இவ் வீரவணக்கக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் சிறப்புப் பேச்சாளர்கள் நினைவுரைகளை நிகழ்த்த. இதனைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும்நடைபெறவுள்ளன. விடுதலைப் புலிகள்கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் சந்தனக்காடு நாடகமும் இங்கு நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது (90)


## முக்கிய அறிவித்தல்

15-6-93 செவ்வாய்க்கிழமை (இன்று) சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற இருந்த சாந்தன் இசைக் குழுவின் **மயான காண்டம்** என்னும் நிகழ்ச்சி சாந்தனின் தந்தையாரின் திடீர் மறைவின் காரணத்தினால் பின் போடப்பட்டுள்ளது என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

**கைத்தொழில் வர்த்தக சங்கம்,**
சாவகச்சேரி.

(5144)



## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்


## தபால் விநியோகத்தை சீராக்க அரச அதிபர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க அதிபர் சில அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக இன்று குமாரி மூலம் கொழும்பு செல்கிறார்.

அரசாங்க அதிபரின் இந்த கொழும்பு விஜயத்தின் போது குடா நாட்டில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவரும் தபால் விடயம் தொடர்பாக தபால் திணைக்கள உயர் அதிகாரிகளை சந்தித்து குடா நாட்டுக்கான தபால் விநியோகத்தை சீராக நடாத்துவது பற்றி கலந்துரையாடவுள்ளார் என தெரியவருகின்றது. [சி]

## முல்லை. காவல் பணிமனை புதுக்குடியிருப்பில் திறப்பு

தமிழீழ காவல்துறையின் முல்லைத்தீவு பிரதேசத்திற்கான காவல்பணிமனைநேற்று காலை 7 15மணியளவில்புதுக்குடியிருப்பில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் தமிழீழ தேசியக் கொடியை முல்லை மாவட்ட தளபதி திரு. பாண்டியன் அவர்களும் தமிழீழ காவல் துறைக் கொடியை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு பா. நடேசன் அவர்களும் ஏற்றிவைத்தனர். இதனைத் தொடர்ந்து கடற்புலிகளின் வன்னிப் பிராந்திய மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி இன்மொழியும், முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழன்பன் அவர்களும் மங்கள விளக்கை ஏற்றிவைக்க, சரியாக காலை 7. 15 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முல்லை மாவட்டத் தளபதி திரு பாண்டியன் காவல் பணிமனையை உத்தியோக பூர்வமாக திறந்துவைத்தார். இந் நிகழ்ச்சியில் ஏராளமான மக்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியாக ''பாண்ட்'' வாத்தியத்துடன் இனிது நிறைவுற்றது

### கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் ஒரு கலைக்கூடம் அமைத்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் வியாழன் பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (24)

### உற்சவகால ஒழுங்கு கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ கால ஒழுங்குகள் குறித்து முடிவுசெய்ய நாளை புதன் கிழமை யாழ். மாநகராட்சி மன்றத்தின் பண்டார மாளிகை அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் உற்சவகால ஒழுங்குகளில் ஈடுபடும் தொண்டர் நிறுவனங்களின் பதவியாளர்களை கலந்துகொண்டு ஒத்துழைக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வருடாந்த உற்சவம் வரும் ஜூலை மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (24)


## சுருட்டு தயாரிப்பாளர் கவனத்திற்கு


### நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துமன்ற ஆதரவில் திருக்கேதீச்சர மான்மியம் -2 வெளியீட்டுவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

## விபத்தில் காயம்

[யாழ்ப்பாணம்]

நேற்றுமாலை மானிப்பாய் அகதி முகாம் முன்பாக மோட்டார் சைக்கிள் மோதியதில் சிறுவன் ஒருவர் காயமடைந்து யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் அகதி முகாமில் வசித்து வரும் மரியநாயகம் பர்சன் [வயது 5] என்பவரே றோட்டைக் கடக்க முற்பட்டதோது மோதுண்டவராவார். [சி]

### 3 வது நாளாக

தாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் சிங்கள யுத்தக் கைதிகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைச் சேர்ந்த விசேட பிரதிநிதி பார்வையிட்டார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வ தேசக் குழுவைச் சேர்ந்த கைதிகள் விவகாரங்களுக்குப்

### எம்மை

ளதாக அறிகிறோம். அவர்கள் வரும்போது எம்மை நிரந்தரமாக விடுவிக்க தீர்வு ஒன்றுடன் வருவதே சிறந்தது எனகருதுகிறேன் அப்படியில்லாவிட்டால் நாம் தொடர்ந்து சாகும்வரை உண்ணாவிரதம் இருப்போம். இந்தக் கடைசி நேரத்தில் விடுதலைப் புலிகளின் தலைவரிடம் எம்மை விடுதலை செய்யும்படி தாழ்மையுடன் கேட்கின்றோம் ஏனெனில் முதலில் எம்மில் இருவரை விடுதலைப் புலிகளின் தலைவர் விடுதலை செய்துள்ளார். மீண்டும் ஒரு முறை நான் புலிகளின் தலைவரிடம் எம்மை விடுதலை செய்யும்படி தாழ்மையுடன் கேட்கிறேன். அரசிடமும் எம்மை விடுவிக்குமாறு கோருவதுடன். எதிர்வரும் 18 ஆம் திகதி எம்மைப் பார்க்கவரும் பெற்றோரிடம் எம் விடுதலை பற்றிப் புலிகளுடன் பேச அரச முக்கியஸ்தர்களையும் அனுப்பிவைக்கும்படிமேன்மை தங்கிய ஜனாதிபதியை தாழ்மையுடன் கேட்கிறேன். எம் விடுதலைபற்றி எந்தவிதமான நல்ல முடிவும் கிடைக்காவிட்டால் சாகும்வரை தொடர்ந்தும் உண்ணாவிரதம் இருப்போம்.

கேள்வி: சிறிலங்கா சிறையில் நீண்டகாலமாகத் தமிழ் மக்கள் எந்த நீதி விசாரணையும் இன்றித் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர். இதுதொடர்பாக நீங்கள் சிறிலங்கா அரசிற்கும், தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கும் என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்; சிறைக் கைதிகளின் துன்பதுயரம் பற்றி சிறைக் கைதிகள் விடுதலைப் புலிகள், சாதாரண பொதுமக்கள் ஆகியோர் அரசால் கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருப்பதைப் பத்திரிகை வாயிலாக நாம் அறிந்திருக்கின்றோம். இவர்களது விடுதலைக்காக அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமை குறித்து நாம் வேதனைப்படுகிறோம்.

கேள்வி; உங்களை விடுவிக்கச் சிங்கள மக்கள் என்ன செய்யவேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்?

பதில்; எமக்கு விடுதலை கிடைக்காவிடின் நாம் இப்போது மேற்கொள்ளும் சாதம்வரை உண்ணாவிரதத்துடன் நாங்களும் இறந்துவிடலாம். எமது விடுதலைக்கு அரசே காரணம். எனவே சிங்கள மக்கள் கூட்டாகச் சேர்ந்து எம்மை விடுதலை செய்யும்படி அரசைக் கோருவதுடன், நெருக்குதலைக் கொடுக்கும்படி நாம் சிங்கள மக்களைக் கேட்கிறோம். நீங்கள் எம்மை விடுவிக்க உங்களால் இயன்றதைச் செய்வதே இந்த நேரத்தில் சரியானது என நாம் சிங்கள மக்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

கேள்வி; உங்களை விடுவிப்பது தொடர்பாக உங்கள் சக படையினருக்கு என்ன கூற விரும்புறீர்கள்?

பதில்; எம் விடுதலைசம்பந்தமாக ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தும்படி படைவீரர்களுக்கும், இராணுவ அதிகாரிகளுக்கும், பொலிஸ் படைக்கும் மற்றும் விசேட அதிகாரிகளுக்கும் நான் தாழ்மையுடன் வேண்டுகோள்விடுக்கின்றேன். இதை இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளே செய்ய முடியும்.

## எறிகணை வீச்சினால் பாடசாலை கட்டடம் சேதம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரின் ஆட்லறி எறிகணைகள் பாடசாலை ஒன்றின் மீது வீழ்ந்து வெடித்ததில் பாடசாலை சேதமடைந்துள்ளது.

நேற்று அதிகாலை 2.30மணியளவில் ஆனையிறவிலிருந்து ஏவப்பட்ட இவ் எறிகணைகள் பூநகரில் நல்லூரிலுள்ள பாடசாலை ஒன்றின் மீது வீழ்ந்து வெடித்தன.

## தற்கொலை

காவல் வேலையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தனது துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இச்சம்பவம கேகாலை பிந்தெனிய பொலிஸ் நிலையத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றுள்ளது. இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர் எம் சரத்நந்தசிறி என்ற பொலிஸ் கான்ஸ்டபிளாவார்


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 14-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9860

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

## முக்கிய அறிவித்தல்

15-6-93 செவ்வாய்க்கிழமை (இன்று) சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற இருந்த சாந்தன் இசைக் குழுவின் **மயான காண்டம்** என்னும் நிகழ்ச்சி சாந்தனின் தந்தையாரின் திடீர் மறைவின் காரணத்தினால் பின் போடப்பட்டுள்ளது என்பதை மன வருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

**கைத்தொழில் வர்த்தக சங்கம்,**
சாவகச்சேரி.

(5144)

---

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 16-09-1930 — மறைவு: 16-05-1993

### உயர்திரு. கதிரவேல் கணபதிப்பிள்ளை

திதி 15-6-1993

எமை யீந்த ஒளி விளக்கே எங்களப்பா
உமையிழந்து வாடுகின்றோம் எங்களப்பா

மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கட்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன், இன்று மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

—குடும்பத்தினர்

அம்மன் கோவிலடி,
கைதடி.

(5145)

---

## மரண அறிவித்தல்

### திரு. பரமசாமி சண்முகதாஸ்

(ராசா)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையை வசிப்பிடமாகக் கொண்ட பரமசாமி சண்முகதாஸ் 14-06-93 நேற்றுகாலமானார். அன்னார் தம்பு பரமசாமி [நெல் வியாபாரி], ஆனந்தவல்லி ஆகியோரின் மூத்த புதல்வனும், திருமதி சுசிலா தேவி [தொழில் திணைக்களம் யாழ்ப்பாணம்], மோகனதாஸ் [சுவிஸ்] கோகிலா தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஸ்வலிங்கம் குணபாகனின் [தம்பிப்பிள்ளை அன்சன்ஸ்] மைத்துனரும், விஸ்வரூபன், மோகனரூபன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 15-06-93 [இன்று] 1 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தம்பு பரமசாமி
(தந்தை)

இல. 12 நாலாம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(5146)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

மாதம்) வீரச்சாவடைந்த வலிகாமம் கோட்டத்தின், நல்லூர் வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம இன்று இரவு 8 00 மணிக்கு, திருநெல்வேலி சிவன் கோவில் அருகாமையில் நடைபெறும்.

இவ் வீரவணக்கக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் சிறப்புப் பேச்சாளர்கள் நினைவுரைகளை நிகழ்த்த, இதனைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. விடுதலைப் புலிகள்கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் சந்தனக்காடு நாடகமும் இங்கு நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது (90)

---

கிழமை யாழ். மாநகராட்சி மன்றத்தின் பண்டார மாளிகை அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் உற்சவகால ஒழுங்குகளில் ஈடுபடும் தொண்டர் நிறுவனங்களின் பதவியாளர்களை கலந்து கொண்டு ஒத்துழைக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வருடாந்த உற்சவம் வரும் ஜூலை மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (24)

---

## சுருட்டு தயாரிப்பாளர் கவனத்திற்கு

### வடமாநில சுருட்டு தயாரிப்பாளர் சங்கம்

எமதுசங்கத்தின் 11-வது வருடாந்தபொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத்தெரிவும் 16-6-93 ஆம் திகதி (நாளை) புதன்கிழமை மாலை 2-00 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவிருப்பதால் இக் கூட்டத்திற்கு சகல சுருட்டு தயாரிப்பாளர்களும் சமுகம் கொடுக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

வ-மா-சுருட்டு தயாரிப்பாளர் சங்கம்
உப்புமடம் சந்தி,
கோண்டாவில்.
14-6-93

தம்பையா குணரட்ணம்
செயலாளர்

(5142)

---

## நீங்காத நினைவின்... ஆண்டு 3



### திரு. இறப்பியல் யோசவ்

(பொன்னுத்துரை)

(இளைப்பாறிய யாழ். மாநகரசபை சிறாப்பர்)

மண்ணில்: 1920-09-30 — விண்ணில்: 1990-06-15

ஆண்டு மூன்று சென்றதையா
கனவாக மறைந்ததையா
விழிகள் எல்லாம் கண்ணீரையா
விம்முகிறோம் உம் பிரிவாலையா.

உங்கள் நினைவில் வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

19/8, மடம் தெற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(இ)

---

அகதி முகாம் முன்பாக மோட்டார் சைக்கிள் மோதியதில் சிறுவன் ஒருவர் காயமடைந்து யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் அகதி முகாமில் வசித்து வரும் மரியநாயகம் பர்சன் [வயது 5] என்பவரே றோட்டைக் கடக்க முற்பட்டபோது மோதுண்டவராவார். [சி]

---

### 3 வது நாளாக

தாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் சிங்கள யுத்தக் கைதிகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைச் சேர்ந்த விசேட பிரதிநிதி பார்வையிட்டார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைச் சேர்ந்த கைதிகள் விவகாரங்களுக்குப் பொறுப்பாக கடமையாற்றும் இவ் அதிகாரி இக்கைதிகளைப் பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளார் இவர் கைதிகளின் உண்ணாவிரதத்தை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகிறார். இவர் முன்னர் நாட்டின் தென் பகுதியில் ஜே. வி. பி கைதிகள் விவகாரத்தையும் கையாண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### மரணித்த

யின் பல பகுதிகளூடாக எடுத்து வரப்பட்டு நாகர்கோயில், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. பின்னர் புலிகளின் இராணுவ அணிவகுப்புடன் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் புகழுடல்கள் விதைக்கப்பட்டன.

---

### அமைச்சர்

இவ் யாழ். விஜயம் குறித்து விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஒருவரிடம் கேட்டபோது, ''சமாதானத்திற்கான கதவுகள் என்றும் திறந்தே இருக்கின்றன. இந்நிலையில், அமைச்சர் தொண்டமான் இனப்பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு யாழ்ப்பாணம் வருவதில் தடையேதும் இல்லை'' எனத் தெரிவித்தார்.

---

### பாவனைக்கு

பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.

தரக் குறைவான மருந்துப் பொருள்கள், சில கடைகளில் விற்கப்படுவதாகவும், வைத்தியர்கள் கொடுக்கும் சிட்டையிலுள்ள மருந்துப் பொருள்களுக்குப் பதிலாகத் தவறான மருந்துகள் விற்கப்படுவது குறித்தும், நுகர்வோர் தெரிவித்த புகார்களை அடுத்து யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் திணைக்களம் தீவிர நடவடிக்கை எடுத்து வருவது தெரிந்ததே.

---

பட்டுள்ளனர். இது தொடர்பாக நீங்கள் சிறிலங்கா அரசிற்கும், தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கும் என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்; சிறைக் கைதிகளின் துன்பதுயரம் பற்றி சிறைக் கைதிகள் விடுதலைப் புலிகள், சாதாரண பொதுமக்கள் ஆகியோர் அரசால் கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருப்பதைப் பத்திரிகை வாயிலாக நாம் அறிந்திருக்கின்றோம். இவர்களது விடுதலைக்காக அரசு எந்த வித நடவடிக்கையும் எடுக்

---

கேள்வி; உங்களை விடுவிப்பது தொடர்பாக உங்கள் சக படையினருக்கு என்ன கூற விரும்புறீர்கள்?

பதில்; எம் விடுதலைசம்பந்தமாக ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தும்படி படைவீரர்களுக்கும், இராணுவ அதிகாரிகளுக்கும், பொலிஸ்படைக்கும் மற்றும் விசேட அதிகாரிகளுக்கும் நான் தாழ்மையுடன் வேண்டுகோள்விடுக்கின்றேன். இதை இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளே செய்ய முடியும்.

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 14-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9860

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 26-4568, | 42-1059, | 27-7081, | 24-7173, | 42-5080 |
| 24-9938, | 41-9165, | 24-7078, | 28-9449, | 28-8951 |
| 42-0970, | 43-4045, | 26-9658, | 27-6563, | 27 7043 |
| 42-9326, | 28-4707, | 27-9052, | 26-3412, | 22-4895 |
| 26-0536, | 26-4526, | 42-2157, | 28-1553, | 27-2020 |
| 24-7672, | 24-6489, | 24-4481, | 27-9404, | 26-5848 |

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 41-8432, | 27-3027, | 24-8364, | 24-6336, | 26-6796 |
| 27-9756, | 26-3582, | 27-8751, | 26-7307, | 42 0704 |
| 27-8879, | 27-2088, | 24-8631, | 26-8051, | 27-9489 |
| 24-4908, | 41-9759, | 24-4707, | 26-0502, | 26-4726 |
| 27-6821. | | | | |

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 23 | 09 | 1971



தாயக விடிவில்: 15 | 06 | 1990

### வீரவேங்கை சுயாத்

[நடராசா குமரகுருநாதன்]

மண்ணைக் காத்திடும் தொண்டு மாவீரம்–சொந்த
மண்ணுக்காய் மாய்வது மிக்க மாவீரம்–எங்கள்
மண்ணினை ஆள்வது சுத்த மாவீரம்–ஈழ
மண்ணினில் வாழ்வது உச்ச மாவீரம்.

உன் நினைவோடு வாழும்
பெற்றோர், சகோதர, சகோதரிகள்,
நண்பர்கள்

குரும்பசிட்டி,
புலோலி.

(5141)